**செய்தி வெளியீடு எண் :04** **நாள்: 26.01.2026**

# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களின் குடியரசு தின உரை – 2026

**தமிழ்நாட்டின் எனது அன்பான சகோதர சகோதரிகளே, வணக்கம்!**

இன்று நாம் இந்தியக் குடியரசு தினத்தைக் கொண்டாடுகிறோம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தருணத்தில், உங்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாளில், பாரத மாதாவின் சுதந்திரத்திற்காக தியாகம் செய்து துன்பப்பட்ட நமது எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை ஆழ்ந்த நன்றியுணர்வுடன் நாம் நினைவு கூர்கிறோம்.

பாரத நாட்டின் மக்களுக்குச் சேவை புரிவதற்காகவும், குடியரசின் விவகாரங்களை வழிநடத்தவும் மிகவும் சக்திவாய்ந்த, நெகிழ்வான அரசியலமைப்பை நமக்கு வழங்கிய அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த அஞ்சலிகளை நாம் செலுத்துகிறோம்.

காலத்தின் அழுத்தத்தைத் தாங்கி நின்றதோடு மட்டுமல்லாமல், மிகவும் வலுவான, திறமையான, நம்பகமான அமைப்புகளாக காலங்களைக் கடந்து வந்திருக்கும் நமது அரசியலமைப்பு நிறுவனங்கள் குறித்து நாம் பெருமைப்படுகிறோம். வலுவான நமது ஜனநாயகத்தைப் பற்றிப் பெருமைப்படுவதற்கான அனைத்து காரணங்களும் நமக்கு இருக்கின்றன.

ஜனநாயகம் என்பது வாழ்ந்துகொண்டிருக்கும் நமது பாரம்பரியமாகும். இது நமது மரபணுவில் இயங்குகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நமது மக்களின் அன்றாட வாழ்க்கையில் அது பிரதிபலிக்கிறது. மேம்பட்ட பங்கேற்புடன் கூடிய பாரதத்தின் பண்டைய தன்னாட்சி மரபுகளுக்கு ஒரு புகழ்மிக்க சான்றாக உத்திரமேரூர் கல்வெட்டுகள் நிற்கின்றன. சிதைவுறாத மிக நீண்ட இந்தத் தொடர்ச்சியின் காரணமாக, பாரதம் ஜனநாயகத்தின் தாயாக உயர்ந்து நிற்கிறது.

நண்பர்களே,

நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புகளுடனும் உயர்ந்துவரும் புதிய

பாரதத்தின் எழுச்சியை ஒட்டுமொத்த உலகமும் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறது. வேகமாக வளர்ந்துவரும் மிகப்பெரிய பொருளாதாரமாக பாரதம் கடந்த பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. உலகளாவிய பொருளாதாரங்களை கடுமையாக பாதித்துவரும் முடிவில்லாத உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றங்கள், நிச்சயமற்ற தன்மைகள் ஆகியவற்றுக்கு மத்தியில், நம்பிக்கை மற்றும் மீட்சியின் கலங்கரை விளக்கமாக பாரதம் திகழ்கிறது. நாம் விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாற்றம் காணவிருக்கிறோம். கடந்த பத்து ஆண்டுகளில், நமது 25 கோடிக்கும் மேற்பட்ட குடிமக்கள் முழுமையான வறுமையிலிருந்து மீண்டு வந்துள்ளனர். விரைவாக வளர்ந்துவரும் புதிய நடுத்தர வர்க்கத்தினரும், ஆர்வமும் முனைப்பும் கொண்டிருக்கும் இளைஞர்களும் இணைந்து நாட்டின் பொருளாதாரப் பரப்பை மறுவடிவமைத்து வருகின்றனர்.

ஒரு தசாப்தத்திற்கு முன்பு ஒன்றும் இல்லாதிருந்த ஒரு இடத்திலிருந்து நகர்ந்து, இன்று உலகின் முதல் மூன்று புத்தொழில் சூழல் அமைப்புகளில் ஒன்றாக பாரதம் உருப்பெற்றுள்ளது. அறிவியல், தொழில்நுட்பத்தில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.

நமது சுபான்சு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்த முதல் இந்தியர் என்று ஆனபோது, விண்வெளித் துறையில் நாம் ஒரு புதிய வரலாற்றைப் படைத்தோம். நமது விண்வெளி ஆய்வுத் திட்டங்களை மேம்படுத்தவும், துரிதப்படுத்தவும் பல முக்கியமான சோதனைகளை அங்கு அவர் மேற்கொண்டார். நமது விண்வெளித் துறைக்கான தேவைகள் பெருகியபோது, இன்று இந்தத் துறையில் 300க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. நாம் ஒரு செழிப்பான விண்வெளிப் பொருளாதாரத்தை எதிர்நோக்கி இருக்கிறோம்.

பாதுகாப்புத் துறையில், இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்புத் திறன்களின் தொழில்நுட்ப மேன்மையை ஆபரேஷன் சிந்தூர் நிரூபித்தது. பாகிஸ்தானின் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு

பதிலளிக்கும் விதமாக, பாகிஸ்தானின் பயங்கரவாதக் கட்டமைப்புகளை பாரதம் அழித்தது. 100க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகளைக் கொன்றது. பாகிஸ்தானின் பதிலடி கொடுக்கும் திறனை செயலிழக்கச் செய்தது. பாதுகாப்புத் துறைக்கான 1000க்கும் மேற்பட்ட புத்தொழில் அமைப்புகள் இன்று நம்மிடம் உள்ளன. நமது பாதுகாப்பு ஏற்றுமதியும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.

பாரதத்தின் பாதுகாப்புப் பொருள்களின் உற்பத்தி, சாதனை அளவாக ரூ.1.54 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இவற்றின் ஏற்றுமதி ரூ. 23,622 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 12 சதவீத அதிக வளர்ச்சியாகும். பாதுகாப்புப் பொருள்களின் கையகப்படுத்துதல்களில் கிட்டத்தட்ட 65 சதவீதம் இப்போது உள்நாட்டு உற்பத்தியாகவே உள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு அமைப்பு முறைகள் கிட்டத்தட்ட 80 நாடுகளின் பாதுகாப்புத் தேவைகளுக்கு சேவை செய்கின்றன. 2029ஆம் ஆண்டுக்குள் ரூ.3 லட்சம் கோடி உற்பத்தி மற்றும் ரூ.50,000 கோடி ஏற்றுமதி இலக்குகளுடன் நம்பகமான மேம்பட்ட உள்நாட்டுப் பாதுகாப்புத் திறன்களுக்கான உலகளாவிய மையமாக பாரதம் தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, மேம்பட்ட ரோபாட்டிக்ஸ், குவாண்டம் கம்ப்யூட்டிங், நானோ தொழில்நுட்பம் போன்ற புதுயுகத் தொழில்நுட்பங்களின் களத்தில், சிறந்து விளங்கும் சில நாடுகளில் பாரதமும் ஒன்றாகும்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில், இந்தியா உலகளாவிய தலைவராக வளர்ந்து வருகிறது. மாசு உண்டாக்காத எரிசக்தி இலக்குகளை, திட்டமிட்டதை விட முன்னதாகவே இந்தியா அடைந்துவருகிறது. முதல் முறையாக, மின்சார உற்பத்தியில் புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்கள், நிறுவப்பட்ட மொத்த மின் உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளன. இது 2030ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்காகும். மொத்த மின் திறன் 500 கிகாவாட்டையும் தாண்டியிருக்கும் நிலையில், புதைபடிவ

எரிபொருட்களிலிருந்து விலகியிருக்கும் இத்தகைய மாற்றம், நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம் மீதான பொறுப்புணர்வு, எரிசக்திப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

உலகத் தரம் வாய்ந்த சாலைகள், ரயில் பாதைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஆகியவை இணைப்பிற்கான நமது ஆற்றலையும், பொருளாதாரத் திறனையும் மறுவடிவமைப்பு செய்துள்ளன. இதன் மூலம் இந்தியாவின் உள்கட்டமைப்பில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய ரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாடு ரூ.6,626 கோடி ஒதுக்கீடு பெற்று, 80க்கும் மேற்பட்ட நிலையங்களை நவீனமயமாக்குதல், வந்தே பாரத் ரயில்கள் மூலம் பிராந்திய இணைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் ஒரு முக்கிய பயனாளியாக உள்ளது. ஆண்டுதோறும் சுமார் 20 லட்சம் பயணிகளைக் கையாளும் திறன் கொண்ட தூத்துக்குடி விமான நிலைய முனையம், தென் மாவட்டங்களுக்கான இணைப்பை அதிகரித்து வருகிறது, அதே நேரத்தில் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் வடக்குப் பகுதியில் உள்ள சரக்குக் கப்பல் நிறுத்துமிடம்-3, சரக்கு கையாளுதலை விரிவுபடுத்தி சேவைகளை நெறிப்படுத்தியுள்ளது. இந்தப் பல்வகை மேம்பாடுகள் அனைத்தும் சேர்ந்து, பொருள்களின் இயக்கத்தை மேம்படுத்துகின்றன, வர்த்தகத்தை எளிதாக்குகின்றன, வேலைவாய்ப்பை உருவாக்குகின்றன, பொருட்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகலை அதிகரிக்கின்றன. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் இவை வலுப்படுத்துகின்றன.

2025, டிசம்பர் மாதத்தில் மட்டும், கிட்டத்தட்ட ரூ.28 லட்சம் கோடி மதிப்புள்ள 21.6 பில்லியன் பரிவர்த்தனைகளை யுபிஐ செயல்படுத்தியுள்ளது. மாபெரும் இந்த அளவு இந்தியாவின் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை உள்கட்டமைப்பின் அற்புதமான திறன், நம்பகத்தன்மை, அதன் உலகளாவிய தர வலிமை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது. நமது டிஜிட்டல் உள்கட்டமைப்பு உலகின் மிகச்

சிறந்த கட்டமைப்புகளில் ஒன்றாகும் என்பதை இது காட்டுகிறது.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட விரிவான சீர்திருத்தச் செயல்முறை மிகவும் வேகத்தை அடைந்து, விரைவுச் சீர்திருத்தமாக மாறியுள்ளது. இந்தியாவில் நடைபெற்றுவரும் சீர்திருத்தங்களின் அளவும் வேகமும் உலகிற்கு திகைப்பூட்டும் வகையில் உள்ளது.

நமது பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் கூடவே, உலகளாவிய விளையாட்டு அரங்கில் நமது எழுச்சியும் அதே அளவுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது. நமது பெண்கள் கிரிக்கெட் அணி முதல் முறையாக உலகக் கோப்பையை வென்றது, பெண் சக்திக்கு இது ஒரு பிரகாசமான சான்றாகும். உலக பாரா தடகள சாம்பியன்ஷிப்பில் பாரதத்தின் பாரா-தடகள வீரர்கள் 22 பதக்கங்களை வென்று வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் படைத்தனர். இதுதவிர, நமது பார்வை மாற்றுத் திறனாளிகளின் பெண்கள் கிரிக்கெட் அணி பார்வை மாற்றுத் திறனாளிப் பெண்களுக்கான 20-20 உலகக் கோப்பையை முதன்முதலாக வென்றது. இது பாரதத்தின் விளையாட்டு வீரர்களின் உறுதிப்பாடு, மீள்தன்மை, தடுக்கவியலாத ஊக்கம் ஆகியவற்றின் குறிப்பிடத்தகுந்த வெளிப்பாடாகும்.

மாநிலங்களுக்கு இடையே நிலவும் ஆரோக்கியமான போட்டி செயல்திறனையும் புதுமைகளையும் ஊக்குவிக்கிறது. கொள்கைச் சீர்திருத்தங்களும் கட்டமைப்பு நடவடிக்கைகளும் வளர்ச்சியை அதிகமாக ஊக்குவிக்கின்றன. ஒரு காலத்தில் பின்தங்கியதாகக் கருதப்பட்ட பகுதிகள் புதிய வெற்றிகளைப் படைக்க இவை உதவுகின்றன. தொழில்நுட்பம், உற்பத்தித்துறை, பசுமை ஆற்றல் ஆகிய துறைகளில் வாய்ப்புகளை வழங்கும் வகையில், உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு இந்தியா ஒரு விருப்பமான இடமாக உருவெடுத்துள்ளது.

நண்பர்களே,

பாரதம் எழுச்சி பெற்று வளர்ச்சியுடன் இணைந்து, காலத்தால்

அழியாத அதன் பெருமைமிக்க பாரம்பரியமான அதன் மரபுரிமைகளிலிருந்து வலிமையைப் பெறுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்மை வழிநடத்திவரும் உறுதியான நீடித்த மனப்பான்மையின் துணையுடன் பாரத தேசத்தவர் ஒவ்வொருவரையும் இது ஊக்குவிக்கிறது. பாரம்பரியம் என்று வரும்போது, நமது தமிழ் மரபு பற்றி பாரத தேசத்தவர் ஒவ்வொருவரும் பெருமை கொள்கிறார்கள் – தமிழ் மரபு மிகவும் வளமானது, மிகவும் பழமையானது, என்றென்றும் ஊக்கமளிக்கக் கூடியது.

சமீபத்திய ஆண்டுகளில், நமது வளமான தமிழ்ப் பாரம்பரியத்தின் துடிப்பான மீள் எழுச்சியை நாம் கண்டு வந்திருக்கிறோம். கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பாரம்பரியத்தை நமது மக்கள் 2025ஆம் ஆண்டில், மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடினர். இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம், ராமநவமியின் போது, கம்பரின் பிறந்த இடமான தேரழுந்தூரில் பத்து நாள் விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தது. கம்பன் கழகங்கள் புத்துயிர் பெற்றன. சென்னை மக்கள் மாளிகை ஏற்பாடு செய்திருந்த கம்பர் பற்றிய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் பல்லாயிரக்கணக்கான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இது நமது இலக்கியத்தின் மீதும் கலாச்சாரப் பாரம்பரியத்திலும் நமது இளைஞர்களுக்கு இருக்கும் ஆழமான ஈடுபாட்டை இது பிரதிபலிக்கிறது.

நண்பர்களே,

நமது சோழர்களின் பெருமைமிகுந்த பாரம்பரியம் தேசம் முழுவதிலும் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. ராஜேந்திர சோழனின் ஆயிரமாவது ஆண்டு விழா வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு பிரமாண்டமான விழாவாகக் கொண்டாடப்பட்டது. மத்திய கலாச்சார அமைச்சகம் இந்த கொண்டாட்டங்களுக்கு துணைநின்றது. தமிழ்ப் பாரம்பரியத்தின் மீது மிகுந்த அபிமானம் கொண்டிருக்கும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் இதில் பங்கேற்று, ராஜ ராஜ சோழனுக்கும் ராஜேந்திர சோழனுக்கும் அற்புதமான சிலைகள்

நிறுவப்படும் என்று அறிவித்தார். காலத்தால் அழியாத பாரதத்தின் பாரம்பரியப் பெருமையை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.

மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடியால் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்படும் வருடாந்திர காசி-தமிழ்ச் சங்கமம் மூலம் தமிழ்நாட்டிற்கும் காசிக்கும் இடையிலான ஆழமான, பழமையான தொடர்பை நாம் கொண்டாடினோம். இரு பகுதிகளையும் இணைக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டு காலப் பழமையான கலாச்சார மற்றும் ஆன்மீக தொடர்ச்சியைப் புதுப்பித்தோம். 2025ஆம் ஆண்டில், இந்த விழாவின் நான்காம் பதிப்பு “தமிழ்க் கார்காலம்” என்ற கருப்பொருளின் கீழ் பெருத்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கொண்டாட்டங்களுக்கு இது புதிய உயிர்ச்சக்தியை ஊட்டியது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது தாரக மந்திரத்தை ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற வகையில் எடுத்துக்காட்டியது.

உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாட்டின் பெருமையில் ஆழ்ந்து, தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, அதன் இலக்கியம், பாரம்பரியம், மரபுகள், உணவு வகைகள், விருந்தோம்பல் அரவணைப்புகளை நேரில் ஆராய்ந்தனர்.

அதே நேரத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உத்தரபிரதேசத்திற்குச் சென்று, மாணவர்களுக்கு தமிழின் அடிப்படைகளை அறிமுகப்படுத்தினர். 1,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். இந்தப் பரிமாற்றங்களால் ஈர்க்கப்பட்ட உத்தரபிரதேச அரசாங்கம் பள்ளிகளில் தமிழை மூன்றாவது விருப்ப மொழியாகச் சேர்க்க முடிவு செய்துள்ளது. இதைத் தவிர, குவஹாத்தி பல்கலைக்கழகம் வடகிழக்கு இளைஞர்களுக்கு தமிழில் சான்றிதழ் மற்றும் பட்டய படிப்புகளை வழங்கத் தொடங்கியுள்ளது.

மாநிலத்திற்கு அப்பால் வெளியே உள்ள பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தமிழ் மொழிப் படிப்புகளை ஆர்வத்துடன் பயின்று வருவதால், இந்தியா முழுவதும் புதிய குரல்களையும் புதிய இதயங்களையும் தமிழ் மொழி கண்டறிந்து வருகிறது. டெல்லி மற்றும் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் சரளமான தமிழில்

உரையாடல்களை நடத்தியபோது நான் மிகவும் நெகிழ்ச்சியடைந்தேன். அது மகிழ்ச்சியும் பெருமிதமும் நிறைந்த ஒரு தருணமாக இருந்தது. உயிரோட்டம் மிக்க இந்தப் பரிமாற்றங்கள் ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உண்மையான உணர்வை அது பிரதிபலித்தது. நமது மொழிகளும் கலாச்சாரமும் மக்களை ஒன்றிணைக்கின்றன. புரிதலையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கின்றன. பழமையான நமது நாகரிகத்தின் ஒற்றுமையைக் கொண்டாடும் விதத்தில் நீடித்த பிணைப்புகளை உருவாக்குகின்றன.

நண்பர்களே,

வந்தே மாதரம் பாடல் தமிழக மக்களின் இதயங்களில் நீண்ட காலமாக ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. தேசபக்தி, ஒற்றுமை பற்றிய செய்திகளின் மூலம் இந்தப் பாடல் தலைமுறைகளை ஊக்குவிக்கிறது. இந்தப் பாடல் தலைசிறந்த தேசபக்தர் பங்கிம் சந்திர சட்டோபாத்யாவால் 1875ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இந்தப் பாடலின் 150 ஆவது ஆண்டினை நாடு இப்போது கொண்டாடி வருகிறது. மகாகவி சுப்பிரமணிய பாரதி போன்ற தொலைநோக்குடன் கூடிய தேசியவாதத் தலைவர்கள், இந்தப் பாடலின் வலுவூட்டப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பின் மூலம், அதன் கொள்கைகளை சமூகத்தின் நனவில் ஆழமாகப் பதித்தனர். அதே நேரத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை தேசிய சுதந்திரப் போராட்டத்தின் போது மக்களை செயல்படத் தூண்டினார். தனது இறுதித் தருணங்களில் தேசியக்கொடியை ஏந்தியிருந்த திருப்பூர் குமரன், ஆங்கிலேயரின் ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடி தனது உயிரைக் கொடுத்த வாஞ்சிநாதன் போன்ற மாவீரர்கள், வந்தே மாதரம் அடையாளப்படுத்தும் தேசத்தின் மீதான பக்தியையும் தன்னலமற்ற அன்பையும் தைரியமாக வெளிப்படுத்தினர். 1908ஆம் ஆண்டு தூத்துக்குடி பவள ஆலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் முதற்கொண்டு, இன்றைய இளைஞர்கள் வரை பாரதத்தின் மீதான அசைக்க முடியாத அன்பையும் பக்தியையும், தைரியத்தையும் இந்த கீதம் தொடர்ச்சியாக தூண்டிவிட்டு வருகிறது. வந்தே மாதரம் பாடல் தமிழக இளைஞர்களிடையே ஆழமாக

எதிரொலித்து வருகிறது.

இன்று, மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளும், கல்லூரிகளும் வந்தே மாதரத்தின் 150வது ஆண்டு விழாவை தனித்துவமான வழிகளில் கொண்டாடுகின்றன. இந்த தேசியக் கொண்டாட்டத்தில் நாமும் இணைவோம். மேலும் இந்த கீதத்தின் உணர்வு, முழுமையான வளர்ச்சி கண்ட பாரதத்தை - விக்ஸித் பாரத் 2047ஐ உருவாக்குவதில் நம்மை வழிநடத்தி உற்சாகப்படுத்தட்டும்.

நண்பர்களே,

தமிழ்நாட்டின் விவசாயிகளும் மீனவர்களும் நீண்ட காலமாக நமது நாட்டின் வளர்ச்சியின் மையமாக இருந்துவருகின்றனர். இன்று, பல இளைஞர்களும் முற்போக்கான விவசாயிகளும் இயற்கை வேளாண்மையில் முன்னணியில் உள்ளனர். மண்ணை வளப்படுத்தவும், ஆரோக்கியமான உணவை உற்பத்தி செய்யவும், அதிக மகசூலை நிலைநிறுத்தவும் பாரம்பரிய அறிவை நவீன தொழில்நுட்பத்துடன் கலந்து பயன்படுத்துகின்றனர். இந்த இயக்கம் டாக்டர் ஜி. நம்மாழ்வாரிடமிருந்து உத்வேகம் பெறுகிறது. அவரது தொலைநோக்குப் பார்வை நீடித்த விவசாயத்தில் பாரதத்தின் பயணத்தை தொடர்ந்து வழிநடத்துகிறது. இத்தகைய ஆயிரக்கணக்கான விவசாயிகள் கோயம்புத்தூரில் 2025, நவம்பரில் தங்கள் புதுமைகளைக் காட்சிப்படுத்தினர். நமது மாண்புமிகு பிரதமரிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றனர். இயற்கை விவசாயத்தை ஏற்றுக்கொள்வதில் தென்னிந்திய இளம் வல்லுநர்களின் குறிப்பிடத்தக்க முயற்சிகளை பிரதமர் தனது மனதின் குரல் நிகழ்ச்சியின் 128வது பகுதியில் எடுத்துரைத்தார். இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதும் தாய் பூமியைப் பாதுகாப்பதும் நமது கடமை என்பதை பிரதமர் வலியுறுத்தினார்.

நண்பர்களே,

நமது இளைஞர்களின் ஆற்றலும் முன்முயற்சியும் நாட்டின் எதிர்காலத்தை மாற்றியமைக்கின்றன. இளம் கண்டுபிடிப்பாளர்களும், படைப்பாளிகளும் தங்களின் சிந்தனைகளை செயல்வடிவமாக

மாற்றுகிறார்கள். ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். மேலும் தங்கள் தைரியம், படைப்பாற்றல், சாகச முயற்சிகள் ஆகியவற்றால் சமூகங்களை வலுப்படுத்துகிறார்கள். பாரதம் நம்பிக்கையுடனும் தன்னம்பிக்கையுடனும் முன்னேறுவதை அவர்களின் சுறுசுறுப்பு உறுதி செய்கிறது.

பெண்களால் வழிநடத்தப்படும் வளர்ச்சி நமது தேசிய மறுமலர்ச்சியின் அடித்தளமாகும். மாண்புமிகு பிரதமர் சிறப்பித்துக் கூறியதைப் போல, நமது பெண்களின் சக்தியானது நிறுவனங்களை வழிநடத்துகிறது, சமூகங்களை மாற்றியமைக்கிறது, குடும்பங்களை மேம்படுத்துகிறது. அவர்களின் தலைமை அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துகிறது. சமூகப் பிணைப்புகளை வலுப்படுத்துகிறது. மேலும் பெண்களால் வழிநடத்தப்படும்போது, பாரதம் அதிக வலிமையையும், சமத்துவத்தையும், மீள்தன்மையையும் பெற்று முன்னேறுவது உறுதி செய்யப்படுகிறது.

நமது மாநிலத்தில் மிகச்சிறந்த மனித வளம் இருக்கிறது. நமது இளைஞர்கள், நமது பெண்கள், நமது விவசாயிகள், நமது மீனவர்கள், நமது நெசவாளர்கள், நமது கைவினைஞர்கள் என சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் ‘தேசத்திற்கே முதன்மை’ என்ற உறுதிமொழிக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். நமது வினைத் திட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டு சுயசார்புடைய, வளர்ந்த பாரதத்தை 2047ஆம் ஆண்டிற்குள் நாம் உருவாக்குவோம்.

**மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**வாழ்க தமிழ்நாடு,**

**வாழ்க பாரத மாதா,**

**வந்தே மாதரம்,**

**நன்றி!**

---

**மக்கள் மாளிகை, சென்னை-22**
**நாள்: 26.01.2026**

**வெளியீடு :-**
**மக்கள் தொடர்பு அலுவலகம்**